ஆண்டு சந்தா ரூ. 60/-

# அன்பு பகிர்வு இயக்கம் செய்திமலர்

மலர் : 5 இதழ் : 3 ஜனவரி 2009

## சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்; கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.

ஏசாயா 60:22

2009 HAPPY NEW YEAR!

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## உங்களை நேசிக்கும் குடும்பத்தினரிடமிருந்து....



வருஷத்தை நன்மையினால் முடிசூட்டுகிற நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு எங்களது அன்பின் **புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!**

**சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான், கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.** *ஏசாயா* ***60:22*** என்ற வாக்குத்தத்தத்தின் படி தேவன் இந்த புதிய ஆண்டில் நீங்கள் செய்யும் எல்லா காரியத்தையும் ஸ்திரப்படுத்தி ஆயிரமாகப் பெருகச் செய்வாராக!

கடந்த 2008ம் ஆண்டில் தேவன் நம் ஷாலோம் ஊழியங்களுக்கு கொடுத்த புதிய ஆத்துமாக்களுக்காக, புதிய ஊழியர்களுக்காக, புதிய சபைகளுக்காக, புதிய திட்டங்களுக்காக நன்றி கூறுகிறோம். மேலும் 2008ல் நடைபெற்ற ஒவ்வொரு பயிற்சிக் கூடுகையிலும் எழுப்புதல் கூட்டங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காகவும் அற்புத அடையாளங்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம். தேவனுடைய ராஜ்ஜியத்தைக் கட்டுகின்ற பணியில் ஜெபித்த, நிதி உதவியினால் தாங்கின உங்கள் குடும்பங்களுக்காக, சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, ஜெபக்குழுக்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

இந்த புதிய வருடமும் இரட்டிப்பான ஆத்துமாக்களையும், சபைகளையும், ஊழியர்களையும், திட்டங்களையும் தேவ கிருபையினால் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள். மேலும் இந்த புதிய ஆண்டில் வளர்ந்து வரும் மிஷனெரி தரிசனப் பணியை குறைந்தது இரண்டு பேருக்காவது அறிமுகப்படுத்தி, ஷாலோம் பங்காளர்களாக இணைக்க உங்களை அன்பாய் கேட்கிறோம். உங்கள் யாவருக்காகவும் நாங்கள் இருவரும் அனுதினமும் பாரத்தோடு ஜெபித்து வருகிறோம்.

***தேவன் தாமே உங்களை ஆயிரம் மடங்கு ஆசீர்வதித்து உயர்த்துவாராக!***

*தேவ அறுவடைபணியில் உங்கள் அன்பு சகோதரன் & சகோதரி*

*( V. தேவதாஸ் )* *( D. வனிதா தேவதாஸ் )*

# ஆயிரமாக, பலத்த ஜாதியாக ஆசீர்வதிக்கப்படும் ஆண்டு – 2009

புத்தாண்டு சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

> ***சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான்;***
> ***கர்த்தராகிய நான் ஏற்றகாலத்தில் இதைத் தீவிரமாய் நடப்பிப்பேன்.***
> ஏசாயா 60 : 22

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் எங்களது புத்தாண்டு நல் வாழ்த்துக்கள். தேவன் தாமே இந்த புதிய 2009ஆம் ஆண்டு பலுகிப் பெருகி, ஸ்திரப்படுத்தப்படும் உன்னதமான வருஷமாக ஆசீர்வதிப்பாராக!

கடந்த நவம்பர் மாதத்தில் தேவ பாதத்தில் ஒரு நாள் காத்திருக்கும் போது ஆவியானவர் ஏசாயா 60:20 வாக்குத்தத்தத்தை இவ்வருட ஆசீர்வாதமாகத் தந்தார். என் மனைவி வஹிதாவுடன் ஆவியானவர் மிக நெருக்கமாக இறங்கிவந்து வரும் வருடம் பலகி பெருகுகிற (Growth) வருடமாக மேலும் ஸ்திரப்படுகிற (Establisment) வருடமாக மற்றும் ஆசீர்வாதமாக கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் (Promise) நிறைவேற்றப்படும் வருடமாக விளங்கும் என்று திருவுளம்பற்றினார். ஆகவே இந்த வாக்குத்தத்தத்தைத் தியானிக்கும் போது தேவன் தாமே புது கிருபையால், அபிஷேகத்தால் நிரப்பினார். நாமும் அதை சற்று தியானிப்போம்.

தேவ ஜனங்களாகிய நாம் இவ்வுலகில் சின்னவர்களாக, சிறியவர்களாக காணப்படலாம். ஆனால் நாம் கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம். உபாகமம் 7:7 சொல்கிறது **“சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள் பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்”.** நாம் கொஞ்சமாக இருந்தாலும் கர்த்தர் தெரிந்து கொண்டு நம்மில் அன்பு கூறுகிறபடியால் **“நீங்கள் இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்–யபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக”** என்று உபாகமம் 1:11ல் சொல்கிறபடி ஆயிரமாக ஆசீர்வதிக்க கர்த்தர் சித்தம் கொண்டுள்ளார். மேலும் கர்த்தர் தாமே **“நான் உண்டுபண்ணின**

**எல்லா ஜாதிகளைப்பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார்"** உபாகமம் 26:19–ன் படி அவருடைய பரிசுத்த ஜாதியாக, பலத்த ஜாதியாக உறுதிப்படுத்த சித்தம் கொண்டுள்ளார். வேதத்தில் தங்களை சின்னவன், சிறியவன் என்று நினைத்த சிலரை தேவன் எப்படியாக ஆயிரமாக, பலத்த ஜாதியாக மாற்றினார் என்பதை தியானிப்போம்.

**சிறியவனான கிதியோனை பலப்படுத்திய தேவன் :**

ஏழு வருடங்கள் கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களின் பொல்லாப்பின் நிமித்தமாக மீதியானியர்கள் கையில் ஒப்புக் கொடுக்கிறார். இஸ்ரவேலர்கள் சிறுமைப்பட்டபோது கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். அப்பொழுது தேவன் மனம் இறங்கி அவர்களை இரட்சிக்கும்படியாக இறங்கி வந்து கிதியோனைத் தேடிப்பிடித்தார். கர்த்தருடைய ஆவியானவர் கிதியோனை நோக்கி **"பராக்கிரமசா–யே"** என்று அழைத்தார். இஸ்ரவேலரை மீதியானியர் கையி–ருந்து இரட்சிப்பாய் என்று அழைப்பு கொடுத்தார். ஆனால் கிதியோன் கொடுத்த பதில் **"ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்"** (நியா. 6:15). கிதியோன் தன்னை நன்கு உணர்ந்தவனாய் ஆண்டவரைப் பார்த்து என் குடும்பம் மிகவும் எளியது என்று தன்னை உள்ளபடியே அறிக்கையிடுகிறான். மட்டுமல்ல தகப்பன் வீட்டில் தான் எல்லாரிலும் சிறியவன் என்றும் அறிக்கை செய்கிறான். எனக்கு அன்பானவர்களே இந்த வருடத்தில் நம்மை தேவன் பயன்படுத்த விரும்புகிறார். நாமும் கூட நம்முடைய நிலைமையை அப்படியே அறிக்கை செய்யும்போது கிதியோனைப் பயன்படுத்தியது போல நம்மையும் தேவன் பயன்படுத்துவார். **"ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்"** (1கொரி. 1:27). **"நான் உன்னோடே கூட இருப்பேன்"** எவ்வளவு பெரிய பாக்கியம் பாருங்கள் சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மோடுகூட இருக்கிறார். சகல அதிகாரமும் கொடுக்கப்பட்ட இயேசு கிறிஸ்து நம்மோடு இம்மானுவேலாக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் என்றென்றும் நம்முடன் இருக்கிறார் அதுதான் நமக்கு இருக்கும் பெலனும், நம்பிக்கையும் நானும் வஹிதாவும்

17 வருடங்கள் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறோம். ஊழியத்தின் பலத்த ஆசீர்வாதங்களைக் கண்டு ஒரு சகோதரன் என்னிடத்தில் கேட்டார். உங்கள் ஊழியத்தின் பெருக்கமான ஆசீர்வாதத்திற்கு என்ன காரணம்? "திரியேக தேவன் எங்களுடன் இருக்கிறார்" என்று நான் கூறினேன்.

இரண்டாவதாக தேவன் "ஒரு மனுஷனை முறியடிப்பதுபோல முறியடிப்பாய்" என்று வாக்குபண்ணினார். நீ ஒரே ஒரு சிறிய மனிதன் என்று நினைக்காதே தேவன் உனக்குப் பின்னாக ஒரு சேனையையே வைத்திருக்கிறார். கிதியோன் எக்காளம் ஊதிய போது சிறியவனான எளியவனான அவன் பின்னாக 30,000 பேர்கள் வந்தார்கள். மட்டுமல்ல தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 300 பராக்கிரமசா–கள் இருந்தார்கள். 300 பேர்கள் மூலமாக தேவன் முழு இஸ்ரவேல் ஜனத்திற்கு இரட்சிப்பை கட்டளையிட்டார். அதே தேவன் இவ்வருடமும் நம்முடன் இருந்து, ஒரே மனிதனாக, ஒரே குடும்பமாக, ஒரே சபையாக தேவன் பெரியகாரியத்தை செய்து முடிக்க கிருபை தருவார். கிதியோனுடன் இருந்த தேவன் நம்மோடு கூட 2009ம் ஆண்டு முழுவதும் இருக்கிறார்.

**சிறு பிள்ளையான எரேமியாவின் மீது வந்த தீர்க்கதரிசன அபிஷேகம் :**

பழைய ஏற்பாட்டில் தேவன் தம் சொந்த இஸ்ரவேல் ஜனங்களையும், ராஜாக்களையும், ஆசாரியர்களையும் வழிநடத்த தேவனை விட்டு தூரம் சென்ற ஜனத்தை சீர்படுத்த தேவனுடைய வார்த்தைகளை அறிவிக்கும்படி எரேமியாவை தேவன் தெரிந்து கொண்டார். இல்க்கியாவின் குமாரன் எரேமியாவை தேவன் அழைத்தபோது தான் ஒரு சிறு பிள்ளை என்று ஆண்டவரிடம் பேசினார். தனக்கு முன்பாக ராஜாங்க அதிகாரம், எதிராக நிற்கும் சத்துருக்களின் சேனை, பக்தி வைராக்கியமுள்ள தேவ ஜனம் என்று சொல்–க் கொள்பவர்கள் மத்தியில் நான் எம்மாத்திரம் என்று புலம்புவதைப் பார்க்கிறோம். ஆனால் கர்த்தர் சொன்னார் **"நீ உன்னை சிறு பிள்ளை என்று சொல்லாதே"** என்று கூறிய தேவன் எரேமியா 1:5ல் கூறுகிறார்.

- ❖ நான் உன்னை தாயின் வயிற்றில் உருவாகுமுன்னே அறிந்திருக்கிறேன்.
- ❖ நான் உன்னை பரிசுத்தம் பண்ணி உள்ளேன்.
- ❖ நான் உன்னை ஜாதிகளுக்கு தீர்க்கதரிசியாக கட்டளையிட்டேன்.

பிடுங்கவும், இடிக்கவும், அழிக்கவும், கவிழ்க்கவும், கட்டவும், நாட்டவும் அதிகாரம் தந்தார். மட்டுமல்லாமல் கர்த்தர் தமது கரத்தை எரேமியாவின் மீது நீட்டினார். எரேமியாவின் வாயைத் தொட்டார். அவர் வார்த்தையை எரேமியாவின் மீது வைத்தார்.

(எரேமியா 1:9) அதன்பின்பாக அவனுடைய ஆவிக்குரிய கண்களைத் திறக்கிறார். தரிசனங்களையும், தீர்க்கதரிசனங்களையும், தேசத்தில் தம் ஜனங்களுக்காகத் தந்து வல்லமையான கருவியாக பயன்படுத்தினார்.

எனக்கன்பானவர்களே, இந்த கடைசி காலங்களில் "மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்றார். உங்கள் குமாரர், குமாரத்திகள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்". என்று வாக்குரைத்தார். இவ்வருடத்தில் நம் பிள்ளைகள் உலகத்தின் பார்வையில் சிறு பிள்ளைகளாக இருந்தாலும் அவர்களை தேவன் தேசத்திற்காக வல்லமையாக பயன்படுத்தப்போகிறார். 2008ஆம் ஆண்டு தேவன் பீல் ஆதிவாசி வா—பர்களுக்கான முகாம்களை நடத்த பாரம் தந்தார். குஜராத், மத்தியப்பிரதேசத்தில் நடத்திய முகாம்களில் சுமார் 1500 வா—ப பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள், தரிசனங்களைக் கண்டார்கள். அது போல சுதேச ஊழியர் குடும்ப முகாமில் சகோதரி வஹிதா தேவதாஸ் தீர்க்கதரிசன வரத்தைக் குறித்து பேசின போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அக்கினியாய் இறங்கி வந்தது. ஊழியர்களும், ஊழியக்காரிகளும் தீர்க்கதரிசனம் உரைக்க ஆரம்பித்தார்கள். சொந்த ஊழியத்தைக் குறித்தும், தங்கள் சொந்த ஜனங்களைக் குறித்தும் தரிசனங்களைப் பெற்றுக் கொண்டார்கள். 2010க்குள் பெரிய எழுப்புதலை பீல் மக்கள் மத்தயில் காணப்போகிறோம். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே ஒரு வேளை உங்களை நீங்கள் ஒரு சிறு பிள்ளையாக நினைக்கலாம் ஒரு வேளை உங்கள் பிள்ளைகளைக் குறித்து அற்பமாக எண்ணலாம். கர்த்தரால் நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் கர்த்தர் அபிஷேகித்து தேசத்திற்கும், சபைக்கும், பல ஜாதிகளுக்கும் ஆசீர்வாதமாக உயர்த்துவார். நான் பிறந்து சில நாட்களில் என் அன்பு தாயார் மரித்துவிட்டார்கள். இவ்வுலகில் அன்பிற்காகவும், சமாதானத்திற்காகவும் பல வருடங்கள் ஏங்கி அலைந்தேன். தேவனை விட்டு தூரமாயிருந்தேன். இவ்வுலகில் ஏன் பிறந்தேன் என அங்கலாய்த்தேன். ஒரு பாட்டில் விஷம் அருந்தி உயிரை மாய்த்துக் கொள்ள துணிந்தேன். ஆனால் தேவன் கிருபையாக புது ஜீவன் கொடுத்தார். 20ம் வயதில் இரட்சிக்கப்பட்ட போது ஒன்றுக்கும் உதவாதவன், சிறியவன் என்று என்னை நினைத்தபோது, தேவன் தேவதாஸ் என்று பேர் சொல்— அழைத்தார். தாயின் கர்ப்பத்தில் உன்னை தெரிந்து கொண்டேன் எனவும், ஜாதிக்கு தீர்க்கதரிசியாகவும், ஆசீர்வாதமாகவும் தெரிந்து கொண்டேன் என்று அபிஷேகித்து இன்று பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு

தீர்க்கதரிசியாகவும், ஆசீர்வாதமாகவும் பயன்படுத்தி வருகிறார். அடியேனை தெரிந்து கொண்ட தேவன் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தெரிந்தெடுத்து வல்லமையான பிள்ளைகளாகப் பயன்படுத்துவாராக!

**சிறியவனாக தன்னை தாழ்த்திய அப்போஸ்தலனாகிய பவுலை வல்லமையாக பயன்படுத்திய தேவன் :**

உயிர்த்தெழுந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிவிக்கும் பணியிலும், சபைகளை ஸ்தாபிக்கும் பணியிலும், சபைகளை ஸ்திரப்படுத்தும் பணியிலும், தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டவர் பவுல்.

1 கொரிந்தியர் 15 அதிகாரம் 9ம் வசனத்தில் அவர் தன்னைப் பற்றி கூறும்போது தாழ்மையுடன் **"நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்"** என்று கூறுகிறார். தன்னைக் குறித்து ஆராய்ந்து பார்க்கிறார். இயேசுவுடன் சுமார் 3½ வருடங்கள் இருந்து ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைக்கவில்லை. அவருடைய அற்புத அடையாளங்கள் நேராக காணவில்லை. அவருடைய போதனைகளைக் கேட்கவில்லை. அவர் கடைசியாகக் கொடுத்த இராப்போஜனத்தில் பங்கு பெறவில்லை. மற்ற அப்போஸ்தலர்களைப் போல பாக்கியம் எனக்கு கிடைக்கவில்லை. மேலாக கிறிஸ்துவின் சபைகளை துன்பப்படுத்தியவன் நான் என அங்கலாய்க்கிறார். தன்னை மிகவும் தேவனுக்கு முன்பாக தாழ்த்துகிறார். பிரியமானவர்களே வேதம் சொல்லுகிறது தாழ்மை உள்ளவர்களுக்கோ தேவன் கிருபை அளிக்கிறார். (யாக்கோபு 4:6) பவுல் அடிகள் 1 கொரி 15:10ல் அதைத்தான் எழுதுகிறார். பாத்திரன் அல்லாத அவர் "நான் இருக்கிறது தேவ கிருபையாலே இருக்கிறேன். என் பிரயாசங்கள் எல்லாவற்றிலும் நான் அல்ல என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படி செய்தது" என்று எழுதுகிறார்.

அப்போஸ்தலரெல்லாரிலும் தன்னை சிறியவன் என்று தாழ்த்தும் போது தேவன் கிருபைகளை அதிகமாய் கொடுத்தார். 3½ வருடங்கள் இயேசுவுடன் இருந்த மற்ற அப்போஸ்தலர்களைக் காட்டிலும் பவுலை பல மடங்கு ஆசீர்வதித்து பயன்படுத்தினார். அப்போஸ்தலர் நடபடிகளில் 28 அதிகாரங்களில் 17 அதிகாரங்களில் பவு—ன் ஊழியங்களை ஆவியானவர் எழுதி வைத்துள்ளார். மற்ற அப்போஸ்தலரைக் காட்டிலும் பல நாடுகளில், நகரங்களில் கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்க வேதன் கிருபை தந்தார். அவருடைய நிருபங்களே அதிகமாக சபைகளுக்கு, ஊழியர்களுக்கு 2000 ஆண்டுகளாக வழிகாட்டியாக உள்ளது. சிறியவனாக என்னப்பட்ட அப்போஸ்தலனாகிய

பவுலை தேவன் பல மடங்காக ஆசீர்வதித்து பலத்த ஜாதியான சபைகளை ஸ்தாபிக்க கிருபை தந்தார். **"கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்".** (யாக்கோபு 4:10) இந்த வசனத்தின்படி வேதன் தம் கிருபையால் அவரை உயர்த்தி ஆசீர்வாதமாக மாற்றினார்.

எனக்கு அன்பானவர்களே! இதை வாசிக்கும் நீங்கள் ஒருவேளை மற்றவர்களை காட்டிலும் அற்பமானவர்களாய், சிறியவர்களாய் உலகத்தின் பார்வையில் காணப்படலாம். ஆனால் தேவனுக்கு முன்பாக உங்களை தாழ்த்தும்போது தேவன் தம் கிருபையால் பவுலை உயர்த்தி அபிஷேகித்து ஆசீர்வாதமாய் மாற்றியது போல உங்களையும் ஆசீர்வதிப்பார்.

இந்த 2009ஆம் வருடத்தில் உங்கள் ஊழியத்தை, உங்கள் சபையை, நீங்கள் செய்யும் வேலைகளை, கர்த்தர் உங்களுக்கு தந்த தொழிலை உங்கள் படிப்பை, எதிர்காலத்தை தேவன் அப்படியே ஆசீர்வதிப்பார். பரிசுத்த பவுலைப் போல சிறியவன் என்று உங்களைத் தாழ்த்துங்கள் தேவன் தம் கிருபையை ஊற்றுவார். நீங்கள் மட்டுமல்ல உங்கள் மூலம் பல ஆயிரக்கணக்கான ஜனங்களையும் ஆசீர்வதிப்பார், உயர்த்துவார். நீங்கள் ஆயிரமான, பலத்த ஜாதியாய் வல்லமையுள்ள தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள்.

தேவ கிருபை உங்கள் யாவருடனும் தங்கி இருப்பதாக! ஆமென்!

## அறுவடை பணிக்கு ஆட்கள் தேவை


தேவ கிருபையினால் கடந்த 17 ஆண்டுகளில் நம் ஷாலோம் ஊழியங்கள் விரைவாக வளர்ந்து வருகிறது. ஆகவே **குஜராத்திலுள்ள தாகோத்** பணித்தள அலுவலகத்தில் பணிபுரிய நமக்கு ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. Accounts கவனிப்பதற்கு.
2. Communication கவனிப்பதற்கு.
3. சிறுவர் விடுதி ஊழிய திட்டங்களை கவனிப்பதற்கு.

இந்தப் பணிகளைச் செய்ய மூன்று ஊழியர்கள் நமக்கு உடனடியாக தேவைப்படுகிறார்கள் ஆகவே வட இந்திய ஊழியத்திற்கு அர்ப்பணித்த பட்டப்படிப்பு படித்த ஆங்கிம் எழுத, பேச தெரிந்தவர்கள் குடும்பமாகவோ அல்லது தனி நபராகவோ இருப்பீர்களானால் எங்களோடு தொடர்பு கொண்டு உங்களது Bio-Data வை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். மேலும் **சகோ. தேவதாஸ்** அவர்களோடு தொடர்பு கொள்ளலாம்.

**செல் போன் : 09377445468**

# சுதேச ஊழியர் சாட்சி சகோ. மான்சிங் K. கராசியா



இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். என் பெயர் மான்சிங் கராசியா. நான் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ்வாடா மாவட்டத்திலுள்ள கதேடியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் அதிகமாக சாராயம் குடிக்கும் பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தேன். அடிக்கடி எனது மனைவி மற்றும் பிள்ளைகள் ஒருவர் பின் ஒருவராக வியாதிப்பட்டு படுக்கையில் இருப்பார்கள். ஒரு சமயம் என்னுடைய மூத்த மகள் வியாதிப்பட்டு மரிக்கும் தருவாயில் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள். மந்திரவாதியிடம் சென்று ப–களைச் செலுத்தினோம், ஆனால் முன்பு இருந்ததைவிட மிகவும் மோசமான நிலைக்குச் சென்றுவிட்டாள். நாங்கள் வேதனையுடன் அழுது கொண்டிருந்தபோது என்னுடைய சொந்தக்காரர் ஒருவர் கவலைப்படாதீர்கள், கிறிஸ்துவின் ஊழியர் ஒருவர் கும்புரா கிராமத்தி–ருந்து வாரந்தோறும் வந்து கூட்டம் நடத்தி இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபிக்கிறார், மக்கள் வியாதிகளி–ருந்து விடுதலை அடைகிறார்கள் என்று கூறினார். உடனே நான் அந்த சுதேச ஊழியரை எனது வீட்டிற்கு அழைத்தேன். அவர் என்னுடைய வீட்டிற்கு வந்து எனது மகளுக்காக விசேஷமாக ஜெபித்தார். என்ன அற்புதம் உடனே என்னுடைய மகளை இயேசு குணமாக்கினார். அந்த நாள் முதல் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டோம்.

எனக்கு ஊழியம் செய்ய வாஞ்சை ஏற்படவே என்னை முழுவதுமாக ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து, என்னுடைய சொந்த ஜனம் இரட்சிக்கப்பட பாரத்துடன் ஊழியம் செய்து வருகிறேன். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குபவர்: **Jesus With Us, Hosur.**

# ஷாலோம் ஊழிய பிரதிநிதிகள் தேவை!



கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, 17 வருடங்களை ஊழியப்பாதையில் கடந்துவர தேவன் கிருபை தந்துள்ளார். பீல் மக்கள் திரளாக இரட்சிக்கப்பட, பீல் சுதேச ஊழியர்களை தந்து, ஆலயங்கள் கட்டப்பட கிருபை செய்துள்ளார். இம்மாபெரும் மிஷனெரிப்பணியில் நாங்கள் மோசேயை போல் முன்னாக நின்று ஊழியங்களை நடத்தி சென்றாலும் எங்களுடன் பணிபுரிய அநேக யோசுவாக்களை, பீல் சுதேச ஊழியர்களை தேசத்தை சுதந்தரிக்க தேவன் எழுப்பியுள்ளார். அதுபோல் ஜெபித்து, தாங்குகிற நீங்கள் தான் மிக முக்கியமானவர்கள். ஆரோன், ஊரைப்போல் நீங்கள் தாங்குவதின் நிமித்தமாக யேகோவா நிசி தேவன் மூலமாக வெற்றியை சுதந்தரிக்கிறோம்.

மேலும் ஆரோன், ஊரைப்போல் தாங்குகிற நீங்கள் எங்களுக்கு மிக முக்கியமானவர்கள். இப்பணியில் இன்னும் 36 மாதங்களில் 1000 ஊழியர்களை, 1000 சபைகளை ஸ்தாபிக்க மேலும் உங்கள் உதவியை நாடுகிறோம். உங்களில் பலர் மிஷனெரி பணி செய்ய வேண்டும் என்கிற வாஞ்சை கொண்டவர்கள் என விசுவாசிக்கிறேன். நீங்கள் மிஷனெரியாக செல்லமுடியவில்லை ஆனாலும் ஆத்தும பாரத்துடன் ஜெபித்து தாங்கி வருகிறீர்கள். அதற்காக தேவனை துதிக்கிறேன். நீங்கள் இன்னும் மிக நெருக்கமாக, சற்று அதிகமாக மிஷனெரி பணியில் ஈடுபட, பீல் மக்கள் திரளாய் இரட்சிக்கப்பட உங்களை ஈடுபடுத்த இன்னும் சில வாய்ப்புகளைத் தருகிறோம்.

ஷாலோம் மிஷனெரி பணிக்கென நீங்கள் பிரதிநிதியாக உங்கள் பகுதியில் செயல்பட உங்களை அன்புடன் அழைக்கிறேன். நம் மிஷனெரி பணியை ஜெபித்து தாங்குவோர் உங்கள் பகுதியில் சில தேவபிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீங்கள் சந்தித்து மாதந்தோறும் அவர்கள் தரும் காணிக்கையை ஜெபித்து வாங்கி, சேர்த்து அனுப்பி வைக்கலாம். ஏற்கனவே உள்ள ஷாலோம் ஆதரவாளர் சொற்பமாக இருந்தாலும், இல்லையெனில் யாருமே இல்லாவிட்டாலும் நம் பணிகளை உங்களை சுற்றியுள்ள தேவ ஜனங்களுக்கு பத்திரிக்கை, பிரதிகள், VCD மூலமாக அறிமுகம் செய்து பங்காளர்களாக இணைய வைத்து ஜெபித்து தாங்க முன் வரலாம். குறைந்தது ஐந்து பேர்களையோ, பத்து பேர்களையோ அறிமுகம் செய்து காணிக்கைகளை மாதம் மாதம் சேர்த்து அனுப்பலாம். இதுவரை நம் ஊழியத்திற்கு 38 பிரதிநிதிகள் காணிக்கை சேர்த்து அனுப்பி வருகிறார்கள்.

பிரதிநிதிகளாக செயல்பட முன்வருவோர் எங்களை தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். அப்படி முன்வரும் பிரதிநிதிகளுக்கு விளக்கங்களைக் கூறி ஷாலோம் பத்திரிக்கைகள் மற்றும் Phamlet, CD, VCD –இவைகளுடன் நீங்கள் காணிக்கை சேகரிக்க Recepit Book (3 Copies உடன்) அனுப்பிவைப்போம். அந்த பகுதியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஷாலோம் மாத பத்திரிக்கையில் உங்களை அறிமுகம் செய்து வைப்போம். நீங்கள் சேகரிக்கும் காணிக்கைகளை மாதந்தோறும் Cheque, DD மூலமாகவோ அல்லது வங்கியில் நேரடியாகவோ செலுத்தலாம். 2ம் ரசீது பிரதிகளை ஷாலோம் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இது நீங்கள் பீல் மக்கள் இரட்சிப்பின் பணிக்காக செய்யும் மிகப்பெரிய உதவிமட்டுமல்ல மிஷனெரி பணியில் முக்கியப் பங்கு பெறுகின்றீர்கள். நீங்கள் சிறிதாக அறிமுகப்படுத்துவதன் மூலம் மிஷனெரி ஆதரவாளர்கள், சிறப்பு நன்கொடையாளர்கள், ஆலயக்கட்டுமான பணி ஆதரவாளர்கள் ஆகியோரை தேவன் உங்களுக்கு கட்டாயம் தருவார். **"தீர்க்கதரிசியை ஏற்றுக் கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்."** (மத். 10:41) என்ற அருள் நாதர் இயேசுகிறிஸ்துவின் வாக்கின்படி மிஷனெரி பணியை ஏற்று பிரதிநிதியாக பணிபுரிய முன்வரும் உங்களை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**"நம் தேசம் தேவனை அறிந்து கொள்ள வேண்டுமானால் தேவபிள்ளைகள் அனைவரும் ஆளுக்கொரு கை ஆண்டவருக்காக வை"** என்ற சொல்–ன்படி செயல்படுவோம் முன்வாருங்கள். விபரங்களுக்கு ஷாலோம் தலைமை அலுவலகத்திலுள்ள சகோ. சாம் குணசீலன் அவர்களை தொடர்பு கொள்ளுங்கள். (செல் : 093456–75468)

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## எங்களுடன் தொடர்பு கொள்ள


| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **Sharing Love Mission**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.`<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | Bro. V. Devadoss<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

email : info@shalommission.in, Website : www.shalommission.in

## தேவ கிருபையால் 17 ஆண்டுகளில்

(1991 ஜுலை முதல்)

| | |
|---|---|
| 450 | பீல் சுதேச ஊழியர்கள் |
| 570 | ஆராதனைக் குழுக்கள் |
| 915 | கிராமங்களில் விசுவாசிகள் |
| 205 | கிராம ஆலயங்கள் |
| 3200 | சபை மூப்பர்கள் |
| 2,00,000 | ஆதிவாசிகளுக்கு சுவிஷேசம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| 800 | ஆதிவாசி மாணர்கள் பராமரிப்பு |
| | மற்றும் பல திட்டங்கள்..... |

## தேவனுக்குச் சித்தமானால் 2010ம் ஆண்டிற்குள்

| | |
|---|---|
| 1000 | பீல் சுதேச ஊழியர்கள் |
| 1000 | கிராம சபைகள் எழுப்பப்படுதல் |
| 500 | கிராம ஆலயங்கள் கட்டப்படுதல் |
| 3,00,000 | ஆத்துமாக்களைச் சந்தித்தல் |
| 10 | பள்ளிக்கூடங்கள் |
| 3000 | ஆதிவாசி மாணவர்களுக்கு விடுதி அமைப்புகள் |
| 1 | ஷாலோம் வேதாகம கல்லூரி மற்றும் |
| | ஆவிக்குரிய பயிற்சிக்கூடம் |

## úRYu RkR 500 ¡WôU T¦jR[j §hPm

***500 கிராம ஸ்திர சபைகள் :–***

கடந்த 17 வருடங்களில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் தேவன் தந்த மாபெரும் அறுவடைக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். பரிசுத்த ஆவியானவர் இந்த ஆண்டில் இதுவரை நடைபெற்ற பணிகளை ஸ்திரப்படுத்த ஏவியுள்ளார். ஊழியர்கள், மூப்பர்கள், விசுவாசிகள், பெண்கள், சிறுவர்கள் இவர்களுக்கு ஏற்றவகையில் பயிற்சிகளையும், சிறப்பு முகாம்களையும் மற்றும் கூட்டங்களையும் நடத்தி 500 ஸ்திரமான சபைகளை உருவாக்கத் திட்டங்களைத் தந்துள்ளார். இந்த 500 ஸ்திரமான சபைகள் மூலம் சந்திக்கப்படாத கிராமங்களும் மக்கள் கூட்டமும் எளிதில் சந்திக்கப்பட.

***3500 சபை மூப்பர்களுக்கான முகாம் :–***

இவ்வருடத்தில் தேவன் தந்த 620 கிராம ஆராதனை குழுக்களில் 500

கிராம சபைகள் பயிற்சி பெற்ற 500 சுதேச ஊழியர்கள் மூலம் உருவாக்கப்பட வேண்டும் என்று ஆவியானவர் வ–யுறுத்தினார். 500 கிராம சபைகள் உறுதியாக நிற்பதற்கு ஒவ்வொரு சபையிலும் 7 மூப்பர்களைத் தெரிந்தெடுத்து 3நாட்கள் அவர்களுக்கு பரிசுத்த வாழ்வு, வல்லமை பெற்ற வாழ்வு, கனிதரும் வாழ்வு என சபை வளர்ச்சிக்கான முகாம்களை நடத்தவுள்ளோம். 10 சபைகளை இணைத்து 70,70 மூப்பர்களாக மூன்று மாநிலத்திலும் நடத்த தீர்மானித்து 3 மாநிலங்களிலும் நடத்தி வருகிறோம்.

இந்த மூப்பர்கள் மூலமாக 7,7 குடும்பங்கள் அடங்கிய பராமரிப்புக் குழுக்களை (Care Cell) அந்தந்த சபைகளை ஏற்படுத்தி குறைந்த பட்சம் 50 குடும்பங்கள் (அதாவது 200 அங்கத்தினர்கள்) உள்ள ஸ்திரமான சபைகளாகவும் சுயமாக இயங்கும் (Self Supporting) சபைகளாகவும் உருவாக்கப்படும். அப்படி குறைந்த பட்சம் 200 அங்கத்தினர் உள்ள 500 கிராம சபைகள் ஸ்திரமான சபைகளாக உருவாக்கப்படுவதின் மூலம் 1–இலட்சம் புதிய ஆத்துமாக்கள் தேவனண்டை சரியாக வழிநடத்த திட்டமிட்டு செயல்படுகிறோம்.

இந்த மூப்பர்கள் பயிற்சி முகாமிற்காக நானும், என் மனைவியும் மூன்று மாநிலத்தி–ருந்தும் சிறந்த அனுபமுள்ள மூத்த ஊழியர்கள் 12 பேர் கொண்ட ஒரு குழுவிற்கு சிறப்பு பயிற்சியளித்து, ஜெபத்துடன் திட்டமிட்டு உருவாக்கியுள்ளோம். இந்த ஊழியர் குழு எங்களோடு இணைந்து சபை மூப்பர்களுக்கு பயிற்சியளித்து வருகிறார்கள்.

தேவன் எங்களுக்கு விசேஷித்த ஞானத்தையும், கிருபையையும், தேவையான நிதி உதவியையும் தந்தருள நீங்கள் ஜெபித்துத் தாங்க அன்புடன் பணித்தளத்தி–ருந்து வேண்டுகிறோம்.

"தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்.
தேவனிடத்தி–ருந்து பெரிய காரியங்களை எதிர்பார்" – வில்–யம் கேரி.

ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஏதாவது ஒரு பொறுப்பை எடுக்கக்கூடிய சிறப்பு நிதியாளர்களை தேவன் தர ஜெபியுங்கள்.

உங்களுக்குத் தெரிந்த மிஷனெரி பணியில் கரிசனை நிறைந்தவர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இத்திட்டத்தில் பங்கு பெறுகிறவர்களுக்கு சிறப்பு அறிக்கைகளை மாதந்தோறும் அனுப்பி வைக்கிறோம்.

நிதி உதவி அனுப்பும் போது **"Sharing Love Mission"** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** தூத்துக்குடியிலுள்ள ஏதாவது ஒரு வங்கிக் கிளைக்கு எடுத்து பதிவுத் தபா–ல் "500 ஸ்திர கிராம சபைத் திட்டம் –2009" என குறிப்பிட்டு தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

– சகோ. வே. தேவதாஸ்

# பணித்தள சாட்சிகள்

தேவனுக்கே மகிமை

**சகோ. கன்னு பாபோர் — மால்வாசி (குஜராத்)**

ரமிலாபேன் என்ற சகோதரிக்கு வியாதியினிமித்தம் வாய் பேச முடியாமல் போனது. விசுவாச சகோதரன் ஜெய்சிங்பாய் இந்த சகோதரியை ஆலயத்திற்கு அழைத்து வந்தார். சபையின் விசுவாசிகளும் நானும் இணைந்து இந்த சகோதரிக்காக விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. சோமா பாரியா — உஸ்வானியா (குஜராத்)**

உஸ்வானியா கிராமத்தைச் சேர்ந்த சக்ரிபேன் என்ற சகோதரி 10 வருடமாக பிசாசின் போராட்டத்தில் அகப்பட்டிருந்தாள். மருத்துவம் மற்றும் மந்திரங்கள் செய்தும், விடுதலை கிடைக்கவில்லை. இறுதியாக இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டு ஆலயத்திற்கு வந்தாள். நானும் சபையின் விசுவாசிகளும் இணைந்து இந்த சகோதரிக்காக பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. மஜு R. டாமோர் — தோவாளியா (குஜராத்)**

சங்காடியா ரமன்பாய் என்ற சகோதரன் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் அவதிப்பட்டார். மருத்துவமனையில் 2 நாட்கள் இருந்து மருத்துவம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியாக நம்முடைய கூட்டத்திற்கு அழைத்து வந்தார்கள். இயேசுவின் நாமத்தில் விசுவாசித்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. சாந்திலால் கலாசுவா — ததேலா (குஜராத்)**

–ம்பாகேடி கிராமத்தைச் சேர்ந்த கஸ்னாபாய் என்ற சகோதரன் பிசாசின் பிடியில் சிக்கி பைத்தியமாக இருந்தார். இவருக்காக பல ஆயிரம் ரூபாய் செலவழித்து மருத்துவம் மற்றும் மந்திரங்கள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. இறுதியாக நம்முடைய சபையில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனைக்கு அழைத்து வந்தார்கள். நான் இயேசுவைப் பற்றிக் கூறி பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. கடியா மச்சார் — டாண்டி சோட்டி (இராஜஸ்தான்)**

எத்ரிபேன் என்ற 30 வயது சகோதரிக்கு வயிற்றில் கட்டி இருந்தது. அநேக மருத்துவம் செய்தும் கட்டி மறையவில்லை. இறுதியாக நம்முடைய ஆலயத்திற்கு வந்து இயேசுவை ஏற்றுக் கொண்டு விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் கட்டி மறையும்படி செய்தார். தேவனுக்கே நன்றி.

**சகோ. ஜித்தேந்திரகுமார் காட் — உமேட்காடி (இராஜஸ்தான்)**

கடந்த மாதம் புதிதாக ஒரு குடும்பத்திற்குச் சென்று இயேசுவைப் பற்றி அறிவித்தேன். அந்தக் குடும்பத்தில் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த சகோதரன் ஒருவர் இருந்தார். அந்த

சகோதரனுக்கு இயேசுவின் நாமத்தைச் சொல்– பாரத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் கேட்டு அற்புதமாக பக்கவாத நோயி–ருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார். இப்போது அந்த சகோதரனின் செயல்படாத உறுப்புகள் செயல்பட ஆரம்பித்துள்ளது. இதனால் முழுக் குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வந்துள்ளார்கள்.

**சகோ. லால்ஹிங் நினாமா — சாக்வா (இராஜஸ்தான்)**

வால்மாபேன் என்ற சகோதரிக்கு கை, கால்கள் செயல்படாமல் இருந்தது. பயங்கர வ–யும் ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டாள். இந்த சகோதரிக்காக நாங்கள் பாரத்தோடு ஜெபித்தபோது தேவன் அற்புதமாக சுகம் கொடுத்தார்

**சகோ. பீம்சந்த் கட்டாரா — பண்டாரியா (இராஜஸ்தான்)**

தனுஷ்பாய் என்ற 50 வயது சகோதரர் சரீரம் முழுவதும் அதிகமான வ–யினால் வேதனைப்பட்டார். கண்களில் பார்வையும் மங்கலாக இருந்தது. சபைக்கு சென்று ஜெபித்தபோது இயேசு சரீரத்தின் எல்லா வேதனையையும் நீக்கியும், கண்களில் நல்ல பார்வை கிடைக்கும்படியும் செய்தார்.

**சகோ. தேவ்சிங் கோரி — தாந்தல்புரா (மத்தியபிரதேசம்)**

சங்கர் டாமோர் என்ற சகோதரனின் மகள் திடீரென மயங்கி விழுந்து விட்டாள். மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போது டாக்டர்கள் பரிசோதித்து விட்டு இவள் பிழைக்க மாட்டாள். எனவே வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள் என்று கூறி விட்டார்கள். உடனே என்னை ஜெபிக்கும்படி அழைத்தார்கள். நான் சென்று இயேசுவின் நாமத்தைச் சொல்– விசுவாசத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக ஜீவனைப் பாதுகாத்தார்.

**சகோ. ரமேஷ் ஜெட்சிங் மக்கானியா — ஹாஸ்வாட் (மத்தியபிரதேசம்)**

எங்கள் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சகோதரியை பாம்பு கடித்து விட்டது. நானும், என் மனைவியும் இணைந்து அந்த சகோதரிக்காக பாரத்தோடு ஜெபித்தோம். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அற்புதமாக விஷத்தை நீக்கி ஜீவனைப் பாதுகாத்தார்.

**சகோ. அந்தரியாஸ் வாகுனியா — ஜெய்டா (மத்தியபிரதேசம்)**

முனிபேன் என்ற சகோதரிக்கு அநேக நாட்களாக இரத்தப்போக்கு வியாதி இருந்தது. இந்த சகோதரி விசுவாசத்துடன் ஞாயிறு ஆராதனைக்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புதமாக விடுதலைக் கொடுத்தார்.

**சகோ. ராஜ்மால் B. முனியா — ஜூனி போர்டி (மத்தியபிரதேசம்)**

காளிபேன் என்ற 19 வயது சகோதரிக்கு 8 நாட்களாக மலேரியா காய்ச்சல் குறையாமல் இருந்தது. இந்நிலையில் அவள் இயேசுவை விசுவாசித்து சபைக்கு வந்தாள். இந்த சகோதரிக்காக பாரத்தோடு ஜெபித்தவுடன் காய்ச்சல் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்து பூரண சுகத்தைப் பெற்றாள். உடனே இவள் குடும்பத்தார் அனைவரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

# ஜேம்ஸ் சால்மர்

மிஷனெரி முன்னோடிகள்



ஸ்காட்லாந்து தேசத்தில் ஆர்டிஸ்சா என்ற கிராமத்தில் 1841 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் தேதி பிறந்தவர் ஜேம்ஸ் சால்மர். இவருக்கு இரண்டு சகோதரிகள் உண்டு. தந்தை ஒரு தச்சர். எளிய, பக்தியுள்ள ஒழுக்கமான குடும்பம். தனது வீட்டின் அருகே இருந்த கட–ல் விளையாடுவார். மீன் பிடிப்பவர்கள் இவரது நண்பர்களாயினர். அஞ்சா நெஞ்சுடையவராக திகழ்ந்தார். கடல் அலையி–ருந்து ஒரு குழந்தையையும், நண்பனையும் காப்பாற்றினார்.

ஓய்வு நாள் பள்ளியில் ஒரு நாள் போதகர் மெக்கி– (Mr. Meikle) பிஜி தீவுகளில் நரமாமிசம் உண்கிற பழங்குடியினர் மத்தியில் பணியாற்றிய ஒரு மிஷனெரியின் கடிதத்தை வாசித்துக் காண்பித்து இவர்கள் மத்தியல் ஊழியம் செய்ய உங்களில் யார் உண்டு**?** என்று அழைப்புக் கொடுத்தார். தேவ ஆவியானவர் ஜேம்ஸ் சால்மருடன் பேசவே, ஜெபித்து ஒப்புக் கொடுத்தார்.

நாட்கள் சென்ற பின்பு ஒரு தேவ ஊழியரானார். நற்செய்தி கூட்டங்கள், வீட்டு ஜெபக் கூடுகைகளை நடத்தி வந்தார். பிறகு போதகர் மெக்கி–யின் உதவியுடன் கிளாஸ்கோ நகர ஊழிய ஸ்தாபனத்தில் சேர்ந்து 8 மாத பணிக்குப் பிறகு ஒரு வேதகலாசாலையில் பயின்றார். **1865**ஆம் ஆண்டு அக்டோபர் **11**ம் நாள் ஜேன் ஹொர்கல் என்ற பெண்ணை மணந்தார். இவரும் மிஷனெரி பணிக்காக தன்னை அர்ப்பணித்து, ஜேம்ஸ் சால்மருக்கு ஏற்ற துணையாக இருந்தார். **1866**ஆம் ஆண்டு ஜனவரி **4**ம் தேதி ஜாண் வில்–யம் – II என்ற கப்ப–ல் புறப்பட்டு **1867**ஆம் ஆண்டு மே மாதம் **20**ம் தேதி பசிபிக் கட–ல் உள்ள அவருவா தீவை வந்தடைந்தனர். அத்தீவு பழங்குடியினர் இவரது பெயரை சால்மர் என்று உச்சரிக்கத் தெரியாமல் டமாட்டி என்று அழைத்தனர். சால்மருக்கு நரமாமிசம் உண்ணுபவர்களிடம் செல்லவே வாஞ்சையாக இருந்தது. குடும்பமாக அம்மக்கள் வாழும் நியுகினியாவிற்குச் செல்ல ஆயத்தமானார். **“கிறிஸ்துவிடம் நெருங்கி வரும் போதெல்லாம் ஆண்டவரை அறியாத மக்களின் பணி வாஞ்சையே என்னை ஆட்கொள்கிறது என்று கூறினார்.”** 1877 ஆம் ஆண்டு மே மாதம் நியுகினியா சென்றடைந்தார்.

கொடூரமான அப்பழங்குடியினர் மனித தாடை எழும்புகளை கையில் அலங்காரமாக அணிந்திருந்தனர். ஒரு முறை ஜேம்ஸ் வீட்டிற்கு அப்பழங்குடியினர் பெருங்கூட்டமாக வந்து, எங்களுக்கு கத்தி, கரண்டி, பாசி போன்ற பொருட்களைக் கொடு இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவோம் என்றார்கள். ஜேம்ஸ் சற்றும் பயப்படாமல், "என்னை வேண்டுமானால் கொன்று சாப்பிடு. ஆனால் என்னை மிரட்டி ஒரு பொருளும் வாங்க முடியாது" எனக் கூறிவிட்டார். மறுநாள் அக்கூட்டத்தின் தலைவன் வந்து மன்னிப்பு கேட்கவே அவனுக்குப் பரிசுகளைக் கொடுத்தார். அது முதல் அப்பழங்குடியினரிடம் அவருக்கு ஒரு நல்ல மதிப்பு ஏற்பட்டது. அவர்களின் கூட்டங்களில் இவரை சிறப்பு விருந்தினராக அழைத்தனர். ஒருமுறை ஒரு பெண் இறந்த தனது கணவனை சமைத்து விருந்து கொடுத்தார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவை அறிந்து வளரலாயினர்.

சிட்னி பட்டணத்திற்கு ஓய்வெடுக்கச் சென்ற அவரது பெலவீனமான மனைவி ஜேன் 1879ஆம் ஆண்டு பிப்ரவரி 20ம் நாள் மரணமடைந்தார். ஊழியத்தில் ஈடுபட்டிருந்த ஜேம்ஸ் சால்மருக்கு பல நாட்கள் கழித்தே தெரிந்தது. துக்கம் மாற தீவிர ஊழிய பணியில் ஈடுபட்டார். **பல தீவுகளுக்கு முன்னோடி மிஷனெரியாக சென்று பணியாற்றியதால், மனிதர்களைச் சாப்பிட்ட அம்மக்கள் மனந்திரும்பி ஐக்கியமாகவும் அன்பாகவும் வாழ கற்றுக் கொண்டனர்.**

1886ஆம் ஆண்டு சாரா எ–சாஹாரிசன் என்ற பெண்ணை மணந்து கொண்டுப் பணித்தளம் சென்றார். இவரும் சாராவும் மிக ஆர்வமாக உழைத்து வந்தார்கள். 1900 ஆம் ஆண்டு தாரு என்ற தீவில் பணியாற்றும் போது, சாராவும் நோயுற்று 3 மாதத்திற்கு மேல் படுக்கையில் இருந்து, தேவராஜ்யம் சேர்ந்தார். அந்த பிரிவையும் ஏற்றுக்கொண்டு தீவிர பணியாற்றினார்.

1901ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் தேதி ஈஸ்டர் மாலை அன்று கோரிபாரி என்ற தீவுக்கு மாம்கின்ஸ் என்ற உடன் ஊழியருடன் படகில் சென்றார். அம்மக்கள் படகை சூழ்ந்து கொண்டு, இருவரையும் ஒரு விருந்து சாலைக்கு அழைத்துச் சென்றனர். திடீரென்று பின்புறமாக இருந்து கட்டைகளால் தாக்கப்பட்டு மரித்தனர். உடல் சிறு சிறு துண்டுகளாக வெட்டப்பட்டன. பெண்கள் அதை சமைத்து அங்கிருந்த பெருங்கூட்டத்தினருக்கு விருந்து படைத்தனர். மனிதனையே உண்ணும் இம்மக்களுக்காக தன்னையே ப–யாக்கியமையால் திரள் கூட்ட மக்கள் கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றனர்.

# கொலானா (குஜராத்) கிராம ஆலயம்



குஜராத், ஜாலோத் தாலுகாவில் கொலானா கிராமம் அமைந்துள்ளது. நூறு வருடங்களுக்கு முன்பு அயர்லாந்து மிஷனெரிகள் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்த பொழுது இந்த கிராமத்தில் அநேக மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் சரியான பின் தொடர் ஊழியம் இல்லாத காரணத்தால் அநேக கிராம விசுவாசிகள் பின் வாங்கி விட்டார்கள். மேலும் சாராயத்திற்கு அடிமைப்பட்டும், மந்திரவாதிகளை நம்பியும், பிற இனத்தவரிடையே பெண் கொண்டும், பெண் கொடுத்தும் இயேசுவை முற்றிலுமாக மறந்து, பிற இனத்தவருடைய பண்டிகைகளை ஆசரித்து வந்தார்கள். ஆகையால் இந்த தலைமுறையில் உள்ள பிள்ளைகள் இயேசுவைப் பற்றி அறியாதவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். இந்த சமயத்தில் பக்கத்து கிராமமாகிய பாரேவாவில் உள்ள சுதேச ஊழியர் சகோ. நூர்ஜிபாய் (மந்திரவாதியாக இருந்தவர். இயேசுவால் தொடப்பட்டு ஊழியம் செய்து வருகிறார்) தங்கள் சொந்தக்காரர்கள் வசிக்கும் கொலானா கிராமத்திற்குச் சென்று சகோ. சம்சு என்ற தொடக்கப் பள்ளி ஆசிரியருக்கு இயேசுவைப் பற்றிக் கூறி, ஆண்டவருக்குள் வழிநடத்தினார். அந்தக் கிராமத்தில் ஞாயிறு தோறும் சகோ. சம்சு வீட்டில் கூட்டம் நடத்தினார். தொடர்ந்து சாராயப் பிடியி–ருந்த இந்தக் கிராமத்திலுள்ள குடும்பங்கள் மீட்கப்பட்டன. சகோ. சம்சு–வின் கடைசித் தம்பி வினேஷ் கணாவா என்பவர் 10ம் வகுப்பு வரை படித்தவர் இவரைத் தேவன் பரிசுத்தாவியினால் நிரப்பினது மட்டுமல்லாமல், ஊழியம் செய்யும்படி உணர்த்தினார். அவரும் தன்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். இவர் இயேசு திரைப்பட ஊழியம் மூலம் கிராமம் கிராமமாக ஊழியம் செய்து வந்தார். இவர் தன்னுடைய சொந்த நிலத்தை தேவனுடைய ஆலயம் கட்டுவதற்கு காணிக்கையாக அளித்தார். இந்த நிலத்தில் ஆலயம் கட்டப்பட்டு 11.10.1998 அன்று தேவ நாமம் மகிமைப்படும்படியாக **Bro. Rowland (President, Roof for Worship)** அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

**Sponsor Name : Roof for Worship - Chennai.**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவியின் பெயர் | : | **ரேக்கா கராசியா** |
| தகப்பனார் பெயர் | : | லால்சிங் கராசியா |
| தாயார் பெயர் | : | சாஜாபேன் |
| பிறந்த நாள் | : | 12.03.1995 |
| படிக்கும் வகுப்பு | : | V |
| சொந்த ஊரின் பெயர் | : | குண்டால் |
| தாலூகா | : | குசல்கட் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |
| படிக்கும் பள்ளி | : | Shalom School |
| தங்கி படிக்கும் விடுதி | : | Debri |

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

ரேக்கா கராசியாவின் குடும்பம் இயேசுவைப் பற்றி அறியாதிருந்த குடும்பம். இந்த சிறுமியின் தாயார் பிசாசின் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டு வியாதிப்பட்டார். அதிக பணம் செலவு செய்து மந்திரக்கிரியைகள் செய்தும், மருத்துவங்கள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இறுதியாக நமது சுதேச ஊழியர் சகோ. பாவ்ஜிபாய் இயேசுவைப் பற்றிக் கூறி ஜெபித்த போது அற்புதமாக பிசாசின் போராட்டத்தி–ருந்து விடுதலை கிடைத்தது. இதன் மூலம் இந்தக் குடும்பம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டது. இந்த சிறுமியின் தந்தை தன்னுடைய வாழ்க்கையை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து இவருடைய சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-**

ஜெபிப்பதிலும், பாடல் பாடுவதிலும் அதிக உற்சாகம் உண்டு. விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. நன்றாக படிப்பாள். ஹிந்தி, கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் அதிக விரும்பம் உண்டு. நல்ல குணமுடையவள், படித்து முடித்து ஆசிரியராக வேண்டும் என்ற விரும்பம் உண்டு.

**ஜெபியுங்கள்:-**

அடிக்கடி வருகிற பெலவீனங்கள் மாறவும், பெற்றோர் செய்கிற ஊழியங்களையும், இவளுடைய குடும்பத்தையும் கர்த்தர் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Dr. Maria Raja Mani,** Kumarapuram.

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 280 பிள்ளைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை.)



## காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.

| வங்கி கணக்கு பெயர்<br>**Sharing Love Mission** | | |
|---|---|---|
| Tamilnad Mercantile Bank | - | 106100710400009 |
| Axis (U.T.I) Bank | - | 105010100094373 |
| I.C.I.C.I Bank | - | 613901112799 |
| Branch : Tuticorin, | கிளை : தூத்துக்குடி | |

- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் ''V. DEVADOSS'' (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- ❖ மாதந்தோறும் ரூ.1500/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- ❖ ரூ.500/-மாதம் கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- ❖ ரூ.400/-மாதம் கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம்.
- ❖ மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்
- ❖ பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ரூ.70/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம்.
- ❖ அத்துடன் மறவாமல் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக ஜெபியுங்கள்.
- ❖ மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- ❖ மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## நாட்டு நடப்புச் செய்திகள்....

2000ம் ஆண்டு கர்நாடகாவில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது நடத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குத–ல் சம்பந்தப்பட்ட தீவிரவாதிகள் 11 பேருக்கு தூக்கு தண்டனையும், 12 பேருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2000 ம் ஆண்டில் கர்நாடகா குல்பர்கா மாவட்டம் வாடி, ஹுப்ளியிலுள்ள கேசவபுரம், பெங்களூர் ஜே.ஜே. நகர் ஆகிய இடங்களிலுள்ள கிறிஸ்தவ வழிபாட்டு தளங்களில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நடத்தினார்கள். மேலும் இந்த வழக்கில் சம்பந்தமுடைய இன்னும் ஏழு பேர் தலைமறைவாகியுள்ளனர்.

இந்தியாவில் கடன் தொல்லை தாங்காமல் தினமும் 46 விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கின்றனர். விவசாயத்திற்கு அரசு பல்வேறு மானியங்கள் வழங்கியபோதும், அது லாபம் ஈட்டும் தொழிலாக இல்லை. மேலும் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை விவசாயிகளுக்கு அரசு தள்ளுபடி செய்தாலும், தனியாரிடம் கடன் வாங்கியவர்களின் நிலமை மிகவும் மோசம்தான். தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரப்படி 2007ஆம் ஆண்டில் 16,632 விவசாயிகள் கடன் சுமையினால் தற்கொலை செய்துள்ளனர்.

மும்பை தாஜ் ஹோட்ட–ல் தீவிரவாதிகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். மும்பையில் 5000 பேரைக் கொல்லவும், தாஜ் ஹோட்டலை தரைமட்டமாக்கவும் இவர்கள் சதித்திட்டம் தீட்டியிருந்தது உயிருடன் பிடிபட்ட தீவிரவாதியிடம் நடத்திய விசாரணை மூலம் தெரியவந்தது. இத்திட்டத்தை செயல்படுத்த தீவிரவாதிகள் பாகிஸ்தானி–ருந்து இந்தியாவிற்கு கப்பல் மூலம் கேட்வே ஆப் இந்தியா பகுதிக்குள் ஊடுருவியுள்ளனர். இத்திட்டத்திற்காக தீவிரவாதிகள் அதிக அளவு வெடிமருந்துகளும், செயற்கைகோள் தொலைபேசி, செல்போன்கள் மற்றும் இருப்பிடத்தை அறிந்து கொள்ள உதவும் நவீன ஜிபிஎஸ் சாப்ட்வேர் கொண்ட கருவிகளும் வைத்திருந்தனர்.

தமிழகத்தில் மையங்கொண்டிருந்த நிஷா புயலால் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் 15 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் நில பரப்பளவில் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு நிவாரணங்களை வழங்க தமிழக அரசு 9 பேர் கொண்ட குழுவை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் “தி சயின்ஸ்” பத்திரிக்கையின் சமீபத்திய பதிப்பில் க–போர்னியா தொழில்நுட்ப மைய விஞ்ஞானி கெர்ரி ஷெய் இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தால் உருவான சுனாமியைவிட மிகவும் பயங்கரமான சுனாமி இந்தியப் பெருங்கட–ல் வரும் ஆண்டுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என அறிவித்துள்ளார். கடந்த 700 ஆண்டுகள் சுமத்ரா தீவில் ஏற்பட்ட பூகம்பங்களைப் பற்றி ஆய்வு நடத்தி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

– நன்றி தினகரன்

# பணித்தளத்தில் 2008ம் ஆண்டு கட்டப்பட்ட ஆலயங்களில் ஒரு சில....



காமெடி, குஜராத்



மண்கோசலா, குஜராத்



காச்சல்தாரா, மத்தியப்பிரதேசம்



ஒஸ்கா, மத்தியப்பிரதேசம்



சூடாதா, மத்தியப்பிரதேசம்



லாலாவாடா, இராஜஸ்தான்



பிப்லாய், இராஜஸ்தான்



வாக்கனேர் (ராவ்தா), இராஜஸ்தான்

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011. TN/WPP-95/SR/2009-2011
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month



உங்கள் யாவருக்கும் எங்கள் அன்பின்

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

சகோ. வே. தேவதாஸ், சகோதரி வஹிதா தேவதாஸ்,
டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா

*Happy New Year*

தலைமை அலுவலக ஊழியர்கள்
பணித்தள அலுவலக ஊழியர்கள்
அனைத்து பீல் சுதேச ஊழியர்கள்
அனைத்து பீல் விசுவாசிகள்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss